14

# கிழக்குப் பல்கலைக்கழகம்

மூன்றாம் வருட பொதுக் கலைமாணித் தேர்வு (வெளிவாரி) 2004/2005
(ஒக்டோபர்/நவம்பர்)- 2006

## PHY 301 – Political Philosophy

நேரம் : 03 மணித்தியாலங்கள்

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

01. அரசியல் மெய்யியல் என்பது எதனைப்பற்றியது என்பதனை அதனுடன் தொடர்புடைய எண்ணக்கருக்களை அடிப்படையாக வைத்து ஆராய்க.

02. அரசியல் மெய்யியல் கற்கையின் வரலாற்றின் முக்கிய கால கட்டங்களை தெளிவுபடுத்துக.

03. பிளட்டோவின் குடியரசு நூலை அடிப்படையாகக் கொண்டு அரசு, அரசன் பற்றிய சிந்தனையினை சுருக்கமாக பரிசீலுக்குக.

04. மாக்ஷிச சிந்தனையில் அரசினது இயல்பு எவ்வாறானது என்பதைத் தெளிவுபடுத்துக.

05. அரசின் உருவாக்கத்தின் அடிப்படை எவ்வாறானது என்பதை ஹொப்ஸினது சிந்தனையின் அடிப்படையில் தெளிவுபடுத்துக.

06. அரசியலில் ஒழுக்கம் எந்தளவு முக்கியம் வாய்ந்தது என்பதனை இராமாயண, மகாபாரத சிந்தனையிலிருந்து ஆதாரம் காட்டி விளக்குக.

07. அர்த்த சாஸ்திரம் கூறும் அரசியல் நுணுக்கங்களை விளக்கி அதனை ஒரு மேலைத்தேய சிந்தனையாளரின் கருத்துக்களுடன் ஒப்பிட்டு விளக்குக.

08. திருக்குறளில் காணப்படும் அரசியல் கருத்துக்களைத் தருக.

09. உரிமைகள் மற்றும் கடமைகள் என்பவற்றின் இயல்புகளை விபரித்து இவற்றிற்கிடையிலான தொடர்பினை விபரிக்குக.

10. எவையேனும் இரண்டிற்கு குறிப்புரை வரைக.
    அ. உரிமையும், சுதந்திரமும்.
    ஆ. அரிஸ்ரோட்டின் அரசியல் சிந்தனை.
    இ. சொத்துடைமை.
    ஈ. சட்டமும், நீதியும்.